## தமிழ்நாடு சிறக்க பெரும் இலக்கை நோக்கிச் செல்லும்

# நமது முதல்வரின் நெடும் பயணம் வெல்லும்! இதை 2026 சொல்லும்!

## சட்டப்பேரவையில் 'முன்னாள் படை வீரர் நலன்' மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு – அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் பதிலுரை!

**சென்னை, ஏப். 30 -**

**சட்டப்பேரவையில் நேற்று, 'முன்னாள் படைவீரர் நலன்' மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், "தமிழ்நாடு சிறக்க பெரும் இலக்கை நோக்கிச் செல்லும் நமது முதல்வரின் நெடும் பயணம் வெல்லும்' இதை 2026 சொல்லும்!" என்று குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் அமைச்சர் கயல்விழி செல்வராஜ் பேசியதாவது:-

முதலமைச்சர், துணை முதல மைச்சர், பேரவைத் தலைவர், பேரவை துணைத்தலைவர், அவை முன்னவர், மூத்த அமைச்சர் பெருமக்கள், அரசு கொறடா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய அனைவரையும் வணங்கி முன்னாள் படைவீரர்கள் நலத்திட்டங்கள் குறித்த எனது சிறு குறிப்புகளை வழங்குகிறேன்.

**"அழிவின் றறைபோகா தாகி வழிவந்த வன்க ணதுவே படை"**

என்ற வான்புகழ் வள்ளுவரின் வரிகளுக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், எந்த நிலையிலும் அழியாததும், சூழ்ச்சிக்கு இரையாகாததும், பரம்பரையாகவே பயமற்ற உறுதி உடையதாகவும் உள்ளதுதான் உண்மையான படை" என்று பொருள் கூறுகிறார்.

பயமறியா படையில் தன் நலன் மறந்து, தன் துணை நலன் துறந்து, இளமை தொலைத்து நாட்டையும், நாட்டின் எல்லையையும், காத்திடும் செயற்கரிய பணியை செய்யும் நமது படை வீரர்களுக்கும், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தார்க ளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் சுமார் 1,24,122 முன்னாள் படைவீரர்களும், 57,921 கைம்பெண்களும் வசித்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான இவ்வரசு அவர்களின் மறுவாழ்விற்காக பல்வேறு நலத்திட்டங்கள், மானியங்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கி நாட்டிலேயே பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

**பாதிக்கப்பட்ட படை வீரரது குடும்பத்தினருக்கு மானியம்!**

குறிப்பாக, 2024-25ம் ஆண்டில் வீர தீரச் செயலில் பதக்கம் பெற்ற 25 நபர்களுக்கு ரூபாய் 13.42 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. போர் மற்றும் போரையொத்த நடவடிக்கைகளினால் உயிர்நீத்த மற்றும் உடல் அளவில் பாதிக்கப்பட்ட படை வீரரது குடும்பத்தினருக்கு வருடாந்திர பராமரிப்பு மானியமாக இவ்வாண்டு 482 பேருக்கு ரூபாய் 1.20 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாதாந்திர நிதியுதவி, மருத்துவ நிதியுதவி மற்றும் கல்வி உதவித் தொகை போன்றவற்றிற்கு 15,702 நபர்களுக்கு ரூபாய் 37.15 கோடி வழங்கப்பட்டுள்ளது. தமது ஒரே மகன் அல்லது மகளை படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோரையும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன் அல்லது மகளை படைப் பணிக்கு அனுப்பிய பெற்றோரையும் கௌரவிக்கும் வகையில் ரூபாய் 20,000 மற்றும் ரூபாய் 25,000 உடன் வெள்ளிப் பதக்கம், வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 89 நபர்களுக்கு ரூபாய் 21.37 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகள் இராணுவப் பணியில் சேரும் போது, முப்படையில் நிரந்தர படைத் துறை அலுவலர் பணிக்கு ரூபாய் 1,00,000மும், குறுகிய கால படைத் துறை அலுவலர் பணிக்கு ரூபாய் 50,000மும், இராணுவத்தில் இளநிலை படை அலுவலர் மற்றும் இதர பணிக்கு ரூபாய் 25,000 தொகுப்பு மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முன்னாள் இராணுவத்தினர் பயன்பெறும் வகையில் சுமார் ஏழு கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு பயிற்சி



அளிக்கப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, முதல் கட்டமாக 10 மாவட்டங்களில் 205 முன்னாள் படைவீரர்களுக்கும், இரண்டாம் கட்டமாக 12 மாவட்டங்களில் 284 முன்னாள் படைவீரர்களுக்கும் பல்வேறு விதமான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 400 முன்னாள் படை வீரர்கள் பயிற்சி பெற விருப்பம் தெரிவித்து பதிவு செய்துள்ளனர். 2024-2025 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு, அரசாணை வெளியிடப்பட்டதன் அடிப்படையில், சொந்த வீடு வைத்துள்ள வருமான வரம்புக்குள் வரும் அனைத்து முன்னாள் படை வீரர்களுக்கும், அவர்களின் கைம்பெண்களுக்கும் வீட்டு வரியை அரையாண்டிற்கு அதிகபட்சமாக ரூபாய் 10,000 அல்லது செலுத்தப்பட்ட அசல் தொகை இவற்றில் எது குறைவோ அத் தொகையை ஈடு செய்ய 2024-2025-ஆம் ஆண்டில் 87 பேருக்கு ரூபாய் 1,09,500 வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் படை வீரரின் மனைவி, திருமணமாகாத மகள்கள் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கும் அறிவிப்பின்கீழ், 76 நபர்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளி முன்னாள் படைவீரர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பிரத்யேக petrol scooter திட்டத்தின்கீழ், 47 பயனாளிகளுக்கும், 17 பயனாளிகளுக்கு சிறப்பு நாற்காலிகளும் 18.4.2025 அன்று திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் நடைபெற்ற அரசு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்பட்டது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதிலேயே படைப்பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு அரசுப் பணியில் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் அடிப்படையில், 249 முன்னாள் படை வீரர்கள் அரசு வேலை வாய்ப்பில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், இங்கே முன்னாள் அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் K.C. கருப்பணன் அவர்கள் பேசும்போது, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்வதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது விரைவாக பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கான வேலைவாய்ப்புகளையும் விரைவில் அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒரு கோடி ரூபாய் வரை வங்கிக் கடன்கள்!**

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசின் மற்றுமொரு புதிய முன்னெடுப்பான "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின்கீழ் தொழில் தொடங்க ஒரு கோடி ரூபாய் வரையிலான வங்கி கடன்களுக்கு, 30 சதவிகிதம் மூலதன மானியமாகவும், 3 சதவிகிதம் வட்டி மானியமாகவும் வழங்கிட 17122024ல் அரசாணை பிறப்பிக்க ப்பட்டு, அடுத்த இரண்டு ஆண்டுகளில் 400 முன்னாள் ராணுவத்தினருக்கு 400 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு ஏறத்தாழ ரூபாய் 120 கோடி முதலீட்டு மானியம் மற்றும் 3 சதவிகிதம் வட்டி மானியம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களிடமிருந்து 2,111 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 425 விண்ணப்பங்களுக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புகழ் பெற்ற அமெரிக்க கல்வியாளரான ராண்டி பௌஷ் அவர்களின், "Showing gratitude is one of the simplest yet most powerful things humans can do for each other." அதாவது, நன்றியுணர்வை வெளிப்படுத்துவது மனிதர்கள் ஒருவருக்கொருவர் செய்யக்கூடிய எளிமையான ஆனால் மிகவும் சக்திவாய்ந்த விஷயங்களில் ஒன்றாகும் என்பார்கள். 2023-2024 ஆம் ஆண்டில், கொடி நாள் நிதி, இதுவரை இல்லாத அளவாக ரூபாய் 67.54 கோடி வழங்கி, இந்தியாவிலேயே 16 ஆண்டுகள் தொடர்ந்து தமிழ்நாடு முதலிடத்தில் இருக்க (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி மறவா நல்லுள்ளம் படைத்த தமிழக மக்களே காரணம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓர் அன்பான வேண்டு கோள், கொடி நாள் நிதியாக உங்களுக்கு விருப்பப்பட்ட தொகையை நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தீர்கள் என்றால், அந்த முன்னாள் படை வீரர்களுக்கு இன்னும் பல சிறப்பான திட்டங்களை துறைமூலம் செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் 2025-2026-ஆம் ஆண்டிற்கான 2 புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**1. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தொடர் சிகிச்சையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் சிகிச்சைக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர புற்றுநோய் நிவாரண நிதி ரூ.7,000/லிருந்து ரூ.10,000/ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு தொடர் மருத்துவச் சிகிச்சையில் உள்ள முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களின் மருத்துவச் செலவுகளை ஈடு செய்யும் வகையில் மாதாந்திர புற்றுநோய் நிவாரண நிதியுதவி மாவட்ட அரசு சிறப்பு மருத்துவக் குழுவிடமிருந்து (Medical Board) பெறப்படும் மருத்துவச் சான்றின் அடிப்படையில் வழங்கப்படும்.

**2. முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் ஈமச்சடங்கிற்காக வழங்கப்பட்டுவரும் ஈமச்சடங்கு நிதியுதவி ரூ.7,000/லிருந்து ரூ.10,000/ ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

முன்னாள் படைவீரர்களின் கைம்பெண்கள் ஈமச்சடங்கு செலவுகளுக்காக இந்நிதியுதவி வழங்கப்படும். கைம்பெண்களின் பூத உடலுக்கு இறுதிச் சடங்குகளை முன்னின்று நடத்துபவருக்கு இந்நிதியுதவி வழங்கப்படும்.

முன்னாள் படைவீரர்களின் நலன் குறித்த தமிழக அரசின் திட்டங்களை கொண்டு சேர்க்க பாடுபடும் பொதுத் துறையின் அரசுச் செயலாளர், முன்னாள் படைவீரர்கள் நல அரசு சிறப்புச் செயலாளர் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இன்று அவையில் குறிப்பிட்டதுபோல, தமிழ்நாடு சிறக்க பெரும் இலக்கை நோக்கி செல்லும், அவரின் நெடும் பயணம் வெல்லும், இதை 2026 சொல்லும்.

இவ்வாறு அவர் பதிலுரை வழங்கினார்.



பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (30.04.2025) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தென்காசி வடக்கு மற்றும் சேலம் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 01.05.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | தென்காசி வடக்கு | மாவட்டக் கழக அலுவலகம், ரயில்வே பீடர் ரோடு, சங்கரன்கோவில். |
| 02.05.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் மேற்கு | ஸ்ரீ வாசுதேவ் மஹால், சங்ககிரி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 28-04-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


நா. கோதண்டன் தலைமை ! ஜே.ஜே.எபினேசர் - இரா.லட்சுமணன் முன்னிலை !

## 40வது வட்டக் கழக சார்பில் தண்ணீர் பந்தல்!

### ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி திறந்து வைக்கின்றனர் !

*சென்னை மே01*

*சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்டக் கழக சார்பில் கோடைகால தண்ணீர் பந்தல் இன்று (01.05 2025 வியாழக்கிழமை) காலை 10 மணியளவில் ஏ.இ.கோயில் திடல், புதுவண்ணார பேட்டை மெட்ரோ ரயில் அருகில் நடைபெறுகிறது.*

*இவ்விழாவில் 40வது வட்ட கழக செயலாளர் நா. கோத ண்டன் தலைமையில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன், ஆகியோர் முன்னிலையில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி ஆகியோர் தண்ணீர் பந்தலை திறந்து வைக்கின்ற னர்.*

*இதில் ஆர்.வெற்றி வீரன், என்.மருதுகணேஷ் என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே. பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், மா. நாகராஜன், எஸ்.பி.எஸ்.புத்தன், டி.வி.முத்துகிருஷ்ணன், கு. நற்குணம், த. தமிழ்கொடி, டி.ஆர்.தணிகாசலம், எம்.எம். சாமி, இரா. சீமான், எம்.எஸ். ரவி, மு.சா. ஹரித்குமார், கே. கலா, க.ஹேமந்த் குமார், டீ. விஜயகுமார், ஆர்.வெங்கட், ஆர்.பத்மநாபன், எஸ்.எம். முருகன், என்.டேனியல், குமாரி நாகராஜன் எம்.சி, ஆகியோர் வரவேற்கின்றனர்.*

*என்.எம்.கதிரேசன், தா.வ. மு.கஜேந்திரன், ப.குமார், ச. தமிழ்செல்வன், பொ.து. ராஜா,ஜெ. பிரேம் ஆனந்த் , கே.மோகன், வீ.முத்து, பி. அன்பழகன், ஆர்.ரமேஷ், சா. திருப்பதிசாமி, ஜெ.சுரேஷ்பாபு, பி.கே.மூர்த்தி, எம். ரூபா சங்கர் வெ.சு. சத்யநாராயணன், இரா.பொன் இளவரசன், சி.மணிகண்டன்,ஜே. பிரேம்ஆனந்த், எஸ். கே.இளங்கோ, பி.சதீஷ்குமார், ப.ஆ. சண்முகம், கோ. ஹரிராமன், வானூர் கே.ராஜீ, எஸ். எம். டி. ரவிச்சந்திரன், பா.கோதண்டன், வி.அன்பரசு, எம்.ஹரி கிருஷ்ணன், ஏ.சுரேஷ், கே.எம்.சேகர், ஆர். ஜெயக்குமார், கே. குப்பன், மா.நல்லதம்பி, ப.அருண்குமார், ஜே.ஜே.நெல்சன், ஜே. ஜே.பிராங்கிளின், ஜெய் (எ) ராமு, எஸ்.கிறிஸ்தவராஜ், பிராங்கிளின், கே. முத்தமிழ்செல்வன், இரா.மகேந்திரன், டி.லெனின், ஆர்.ராஜா, டி. கணேசன், என்.பிரேமாராசன், ஆ.பாபு, தே.ஜனார்த்தனன், எஸ். ஹரிஷ் குமார், சி. கார்த்திக், ஆர்.மூர்த்தி, எஸ். செந்தில்சாமி, டி.சுரேஷ் குமார், எம்.விஜயகுமார், டி. கண்ணன், பி.தமிழ்செல்வன், வி.அருள், ஜெ.வசந்த், சி. சிவகுமார், வி.செல்வராஜ், மல்லா சரவணன், ஜெ. மகேஸ்வரி, எம்.கலை வாணி, இ.லட்சுமி, எம்.ஷீலா மோகன், எ.விந்தன், வி.வி. ரமேஷ், எ.வெங்கடேஷ், எஸ். சேகர், வண்ணை மோகன், க. சரத்குமார், எஸ்.வி.சிவா, க. விக்னேஸ்வரன், ஜி. மணி கண்டன், மு.ராபர்ட் மோ. சிவா, ஜி.தினேஷ்குமார், கே. சதீஷ், சி.மாலினி, என். மோகன்ராஜ், எரிமலை பி. எல்.பாலு, எஸ்.துரை, டிஎல்பி. ரவி, இ.கருணாகரன், கே.ஜி. சங்கர், ஊடகம் ராஜ்குமார், மா. பாஸ்கரன், ஆர். கிருஷ்ணன், எஸ்.கிருஷ்ணசாமி, டி. மனோகரன், எஸ்.மரியசெல்வம், எம்.கோவிந்தராஜ், எஸ். நடராஜ், பி.ராஜேஷ், பி. பாலன், கே.லோகநாதன், ராகவன், பி.ரவி, பி.ஜெயவேல், சதாசிவம், தனசேகர், அசோக் குமார், வி. விக்டர்பாபு, குணா, ஆவின் ராஜ்குமார், எஸ்.நிவேந்தன், டி.பி.ஆர். ராமதாஸ், எஸ்.புவனேஸ்வரி, எஸ்.மஞ்சு, எஸ்.மகிமைராஜ், பி.யுவராணி, இ.வேலு, என். லலிதா,*

*கு.மனோ, எம்.மூர்த்தி, பி.நபிஷா, H. மாரி முத்து, எ. ஜானகி, எம்.ஜெயந்தி, கலைச்செல்வி, வசந்தி, ஆர். லெனின் குமார், கோமளா, ஆட்டோ செல்வம், முரளி, கே.கோபால், நாகப் பன், கலியமூர்த்தி, தாமோத ரன், கே.அயூப் கான், ஜி.மைக்கேல், க. நரேஷ் குமார், கோ. தமிழ்செல்வன், ஜி.பிரேம்குமார், மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டசெயலாளர் நா. கோதண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.*

## கொல்கத்தா நட்சத்திர விடுதியில் தீவிபத்து:

# கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழப்பு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்!

சென்னை, மே 1-

கொல்கத்தாவில் உள்ள நட்சத்திர விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்ததையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன், குழந்தைகள் தியா, ரிதன் ஆகியோரும் மற்றும் பலரும் உயிரிழந்தனர் என்ற செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்; நெஞ்சம் கலங்கினேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, இத்துயர் மிகு நேரத்தில் அவர்களது குடும்பத்தினருக்கு நமது அரசு துணை நிற்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்குப்பகுதி தி.மு.க இளைஞரணி சார்பில் மயிலை மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் லோகேஷ் குமார் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தலை மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன், வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா முன்னிலையில் திறந்து வைத்து பொது மக்களுக்கு நீர், மோர் மற்றும் பழங்கள் வழங்கப்பட்டது. உடன் பகுதி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.